செ.வெ.எண்.72-2019 நாள்:29.06.2019

**விழுப்புரம் மாவட்டம் வானூர், மயிலம், வல்லம், செஞ்சி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் நடைபெற்று வரும் குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் திட்டப் பணிகளை**

**தொழில்துறை முதன்மை செயலாளர்/ விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.என்.முருகானந்தம்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

****

விழுப்புரம் மாவட்டம் வானூர், மயிலம், வல்லம், செஞ்சி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் நடைபெற்று வரும் குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தொழில்துறை முதன்மை செயலாளர்/ விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.என்.முருகானந்தம்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.06.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் போர்வெல் அமைக்கப்பட்டிருந்ததை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து பூத்துறை ஏரியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் தொள்ளாமூர் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளிக் கிணற்றினை பார்வையிட்டு அப்பகுதியில் குடிநீர் விநியோகம் குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்தார். மேலும் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தொள்ளாமூர் ஏரியினை பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு, எறையூர் கிராமத்தில் புதியதாக திறந்தவெளிக்கிணறு அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன் பின்னர் திருவக்கரை பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளிக் கிணற்றினை ஆய்வு செய்து, இப்பணியினை விரைந்து முடித்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டுமெனவும் ஊரக வளர்ச்சித்துறை பொறியாளர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். அதன்பின்னர் திருவக்கரை பகுதியில் மாற்றியமைக்கப்பட்ட போர்வெலிலிருந்து வெளியேறும் நீரை பார்வையிட்டு, அதே இடத்தில் அமைக்கப்பட்டுள்ள 2 போர்வெல்களை பார்வையிட்டு இப்பகுதி மக்களுக்கு இந்த 3 போர்வெல்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மயிலம் ஊராட்சி ஒன்றியம் தழுதாளி பகுதியில் உள்ள திறந்தவெளிக் கிணறு மற்றும் அருகில் உள்ள போர்வெல்லினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதே பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளிக் கிணறு மற்றும் மோட்டார் மூலம் நீர் கொண்டு செல்லும் பைப் லைன்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு, கொல்லியங்குணம் கிராம சேவை மையத்தினை ஆய்வு செய்து அப்பகுதியில் ரூ.19.43 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் திறந்தவெளிக் கிணறு மற்றும்

மோட்டார் மூலம் நீர் விநியோகம் செய்ய பைப் லைன் அமைக்கும் பணியினை ஆய்வு செய்தார்.

அதன் பின்னர் வல்லம் ஊராட்சி ஒன்றியம் மேல்சித்தாமூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளிக் கிணற்றினை பார்வையிட்டு, பைப் லைன் மூலம் கிராம மக்களின் பயன்பாட்டிற்கு குடிநீர் விநியோகிக்கும் முறையினை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து அவியூர் கிராமத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளிக் கிணற்றினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, செஞ்சி ஊராட்சி ஒன்றியம் மாவட்டம்பாடி ஊராட்சியில் ரூ.4.88 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் கிணறு ஆழப்படுத்தப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) திரு.ஜோதி (விழுப்புரம்), திருமதி.ரெத்தினமாலா (கள்ளக்குறிச்சி), உதவி இயக்குநர் (தணிக்கை) திரு.ஆ.துரைசாமி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சுந்தரேசன், வானூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சம்மந்தம், திரு.தேவராஜ், உதவி செயற்பொறியாளர் திரு.ஜோதிவேல், உதவி திட்ட அலுவலர் திரு.ஸ்ரீனிவாசன், உதவி பொறியாளர்கள் திரு.செல்வம், திரு.முகமதுயாசின், திரு.மகேந்திரவர்மன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

-----------------------------------------------------------------------------------------

செய்திவெளியீடு: செய்திமக்கள் தொடர்பு அலுவலர்,விழுப்புரம்.